செய்தி வெளியீடு எண். 140 நாள்.08.03.2017

**திருவள்ளுர் டி,ஆர்.பி.சி.சி. மேல்நிலைப்பள்ளி மற்றும் வெள்ளியூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் (பத்தாம் வகுப்பு) அரசுப் பொதுத் தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

~~~~~

திருவள்ளுர் டி,ஆர்.பி.சி.சி. மேல்நிலைப்பள்ளி மற்றும் வெள்ளியூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் (பத்தாம் வகுப்பு) அரசுப் பொதுத் தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.03.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

இடைநிலைப் பொதுத் தேர்வுகள் 08.03.2017 முதல் 30.03.2017 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 25,246 ஆண்களும், 24,054 பெண்களும் ஆக மொத்தம் 49,300 தேர்வர்கள் தேர்வு எழுதவுள்ளனர். இத்தேர்வுக்கு 142 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு தேர்வு எழுதுகின்றனர். இடைநிலைத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 18 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 36 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாணவர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவதை தடுப்பதற்காக 55 பறக்கும் படை உறுப்பினர்களும், 290 நிரந்தர கண்காணிப்பு படை உறுப்பினர்களும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சார் ஆட்சியர், துணை ஆட்சியர்கள், வருவாய் கோட்ட அலுவலர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள் ஆகியோர் தலைமையில் 142 தேர்வு மையங்களை பிரித்து திடீர் பார்வையிடும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று (08.03.2017) மொழி பாடம் தாள்-1 தேர்வு நடைபெற்றது. மாவட்டத்தில் பிற மொழி (தெலுங்கு) தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை 378. புழல் மத்திய சிறைச்சாலையில் தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை 37. 31 மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். என்று கூறினார்.

இவ்வாய்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.த.ராஜேந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் (திருவள்ளுர்) திருமதி.லில்லிபுஷ்பம், கல்வி துணை ஆய்வாளர் திரு.இ.ராமமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~